6th March 1968]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பெரும்பாலான புத்தகங்கள், சுவடிகள், எல்லாம் சரபோஜி காலத்தில் சேகரிக்கப்பட்டவை. கிட்டத்தட்ட 1790-க்கும் 1800-க்கும் இடையில் அந்த நூல்கள் திரட்டப்பட்டுள்ளன. அவை இப்போதுள்ள பாடத்திட்டங்களுக்கு முழு அளவில் பயன்படக்கூடிய அளவில் இருக்காது. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் நூல்கள் இருக்கக்கூடும். அப்படிப்பட்ட நூல்கள், மருத்துவ நிலையங்கள் போன்றவைகளில் இல்லாவிட்டால், அங்கே வைப்ப தற்கு ஏற்பாடு செய்யலாம்.

Valangaiman High School

184 *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether any strike was staged by the students of Valangaiman High School, Thanjavur District, on 12th of October 1967, as a result of the teachers' misbehaviour towards girl students of that school ; and

(*b*) the steps taken by the Government thereon ?

வலங்கைமான் உயர்நிலைப் பள்ளி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டம் வலங்கைமான் உயர்நிலைப் பள்ளியில் படிக் கும் மாணவிகளிடம் ஆசிரியர்கள் தகாத முறையில் நடந்ததாக அக்டோபர் மாதம் 12-ம் தேதி வேலை நிறுத்தம் ஏதாவது நடந்ததா ?

(இ) இதன்மீது சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) and (இ) 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12-ம் தேதி விடுமுறை நாளானதால் இத்தகைய நிகழ்ச்சி ஏதும் நடைபெறவில்லை. அப்பள்ளி ஆசிரியர் ஒருவர் தகாத முறையில் நடந்து கொண்டதாகச் சொல்லிக் கொண்டு அவரை மாற்றும்படி கோரி, 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13-ம் தேதி அன்று காலையில் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல வில்லை. அங்குள்ள உள்ளூர் அதிகாரிகள் தலையிட்ட பின்னர் அன்று மாலையே மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்றனர். எனினும், அந்த ஆசிரியர் பட்டுக்கோட்டைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

திரு. எம். எத்திராஜுலு : மாணவிகளிடம் ஆசிரியர் தகாத முறை யிலும், ஆசிரியைகளிடம் ஆசிரியர்கள் தகாத முறையிலும், பல நிகழ்ச்சி கள் நடந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதைத் தவிர்க்க பெண்கள் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு ஆண்களை நியமிக்காமல், அதே போல் ஆண் கள் இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு பெண்களைப் போடாமல், இருவரும் சேர்ந்து ஒரே பள்ளியில் பணியாற்றுமல் இருக்கக்கூடிய வகையில் சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குறிக்கோள் தான் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதை மாற்றவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூட பல சமயங்களில் முறையிடுகிருர்கள். பி.யு.சி. அளவில் இதைக் கட்டாயமாகச் செய்யவேண்டுமென்று, துணைவேந்தர் அவர்களும் கண்டிப்போடு சொல் கிருர்கள். உதாரணமாக "அரியலூரில் பெண்கள் படிக்க வாய்ப்பில்லை ; திருச்சிக்கு அனுப்ப வேண்டிய வழியில்லை. கல்லூரியில் சேர்க்கவேண்டு மென்று" முறையிடுகிருர்கள். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தும் கூட, பெண்கள் பள்ளி தனியாக வைத்தாலும், ஆண்கள் பள்ளிகளில் சேர்க்க பெற்றேரர்கள் விரும்புகிருர்கள். கேட்டால் வீட்டு வசதி என்று

சொல்கிருர்கள். கூடுமானவரை பெண்கள் கல்லூரியிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், ஆசிரியைகளையே பணியாற்றவேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், கூடுமானவரை மெல்ல, மெல்ல ஆண்கள் ஆசிரியர்களாக இருக்கும் இடங்களுக்கு, தக்க அளவில் பெண்கள் கிடைப்பார்களானல் அந்த இடத்தில் ஆண்களை எடுத்துவிட்டு ஆசிரியைகளை போட வேண்டுமென்றும் உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

THIRU K. S. ABDUL WAHAB: May I know the number of High Schools in which co-education is in existence in our State?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே. அதற்குத் தனி கேள்வி போடவேண்டும். கூடுமானவரை நாளுக்கு நாள் குறைக்கப்பட்டு வருகிறது.

Cement Factories

*185 *Q*.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the number of cement factories for which licences were issued during 1966–67 in Madras;

(*b*) among them, how many factories have started production; and

(*c*) the reasons for other factories not doing so?

சிமெண்டு தொழிற்சாலை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1966–67-ல் தமிழகத்தில் எத்தனை சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்க உரிமை வழங்கப்பட்டன?

(இ) இவற்றில் எத்தனை உற்பத்தி தொடங்கின?

(உ) மற்றவை உற்பத்தித் தொடங்காததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) 1966–67-ல் தமிழகத்தில் சிமெண்ட் தொழிற்சாலைகள் அமைக்க உரிமம் ஒருவருக்கும் வழங்கப்படவில்லை.

(இ) and (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : இதற்கு முன்னல் அனுமதி வழங்கப்பட்டவைகளில் வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா? எத்தனை பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது? முந்தைய அரசில் யாருக்கு வழங்கப்பட்டது? அவற்றில் வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா? அவை எத்தகைய நிலையில் இருக்கின்றன. ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : ஏற்கெனவே இருந்த சிமிண்ட் தொழிற்சாலைகள் விரைவு படுத்தக் கோரி விண்ணப்பம் போட்டு அந்த முயற்சிகள் பேரில் நான்கைந்து தொழிற்சாலைகள் நடைபெற்று வருகின்றன. அது தவிர, ஆலங்குளத்தில் அரசினர் சார்பில் வைக்கப்பட்டிருக்கிற தொழிற்சாலையில் வேலை நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே இந்தியா சிமிண்ட் லிமிடெட், சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டத்தில் தொழில் நடக்கிறது. சங்கரிதுர்க்கத்தில் சேலத்தில் ஏற்கெனவே உற்பத்தி செய்துவருகிறது. டால்மியா சிமிண்ட், டால்மியாபுரம், திருச்சி மாவட்டம், ஏ. சி. சி. மதுக்கரை, கோயமுத்தூர் ஜில்லாவில் உற்பத்தி நடைபெறுகிறது. மெட்ரூஸ் சிமிண்ட், ராஜபாளையம், ராமநாதபுரம் ஜில்லாவில் உற்பத்தியாகிறது. ஏ. முத்தையா செட்டியார், கரூருக்கு